SSA

THE SPROUTED STAFF OF AARON

# ஆரோனின் துளிர்த்த கோல்

வேதம் அறிவோம்,
தேவர்களாவோம்

மாத இதழ் : செப்டம்பர் 2018

## எபேசியர் 5 : 2

கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக் கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தது போல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள்.

★★★★★

## முதல் ஆசிரியர் இயேசு

செப்டம்பர் - இது ஆசிரியர்களைக் கொண்டாடும் மாதம்,
செம்மையாய் பணியாற்றியோரைப் போற்றும் மாதம்,
செழுங்கிளை தாங்கிய இராதாகிருட்டிணனை நினைக்கும் மாதம்.

நம்மில் பலரும் ஆசிரியர்களே, நாமும் இவ்வறப்பணியாற்ற
பட்டி தொட்டிகளுக்குச் சென்றே எளிமையாய் வாழ்ந்து
ஆசிரியர்களாயும், ஆசாரியர்களாயும் உழைத்து வழிகோலிய
முன்னோடி மிஷினரிகளை நினைந்தே - துதிப்போம் தேவனை.

அடிச்சுவட்டைப் பின்பற்ற மாதிரியாத் திகழும்
ஆண்டவராம் இயேசுவே நம் ரபியும், குருவும், போதகருமாம்.
இனிமைமிகு அவரின் அறிவுரைகள் ஒன்றல்ல, இரண்டல்ல;
ஓராயிரம் போதனைகளை நாளும் ஓய்வின்றி சொன்னார்.
அவை ஒருபோதும் சுமையல்ல, இளைப்பாறுதலை ஈயும் மதுரமே;
அவ்வார்த்தைகளைத் தாமே வாழ்வாக்கி உன்னதரானார்.
அவர்வழி பற்றி மகிமைப்படுத்துவோம் மகிபனை.

- D. சுதந்திரதேவி, ஈச்சம்பட்டி

**அன்புடையீர், வணக்கம்.**

நம் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் ஜெபங்களைக் குறித்து பார்த்து வருகிறோம்.

அப்பா இப்பாத்திரமே நீக்கும் நின் சித்தமானால்
எப்படியும் உம் சித்தம் செய்ய என்னைத் தத்தம் செய்தேன் என்றாரே.

- விசுவாச கீதங்கள் 411

9. இயேசு கிறிஸ்துவின் கெத்செமனே ஜெபம் : மத். 26:36-46, மாற். 14:32-40, லூக். 22: 39-46. - பிதாவின் சித்தத்தையே தன் வாழ்நாள் முழுவதும் நிறைவேற்றினார் இயேசு. தம் முன் வைக்கப்பட்ட சிலுவைப்பாடுகள், மரணம் அவரை முழுவதும் கலக்கமடையச் செய்தது. மிகவும் சோதனையான இந்த சூழ்நிலையில் இயேசு கெத்செமனே தோட்டத்தில் மீண்டும் மீண்டும் ஜெபித்தார். வரப்போகிற துன்பங்கள் எதுவும் மாறப் போவதில்லை. இதனை அறிந்திருந்த இயேசு ஜெபித்ததால் ஏற்பட்ட விளைவுகளை ஈண்டு காண்போம்.

**துன்பங்களை ஏற்கும் மனநிலை பெற்றார் :** சிலுவைப்பாடுகளாகிய கசப்பான பாத்தரத்தை நீக்கும்படி இயேசு ஜெபித்தார். மனுக்குல மீட்பிற்கு இப்பாடுகள் தவிர்க்க முடியாதவை என தெரிந்தும் அவர் இவ்வாறு தன் வேண்டுதலை ஏறெடுத்தார்; எனினும் உம் சித்தம் ஆகக்கடவது எனக் கூறி ஏற்றுக்கொண்டார். இந்த மனபக்குவம் ஜெபத்தினால் ஏற்பட்டதன் விளைவே ஆகும்.

**துன்பங்களை தாங்கும் சக்தி பெற்றார்:** இந்த ஜெபத்தை ஏறெடுத்தன் விளைவாக துன்பங்களை எதிர்கொண்டு தாங்கிக் கொள்ளும் ஆற்றல், சகித்துக் கொள்ளும் பொறுமை பெற்றார்.

**துன்பங்களின் நடுவில் சமாதானம் பெற்றார்:** போர்க்களத்தில் நிற்கும் போர்வீரன் போர் ஆரவாரங்களுக்கு நடுவே மன அமைதியை இழந்தால் தோல்வியைத் தழுவ ஏது ஏற்படும். துன்பங்கள் தமக்காக நியிமிக்கப்பட்டுவிட்டதை உணர்ந்த பிறகும் இயேசு அதிகமாக ஜெபித்தார். தேவ சமாதானம் அவரை ஆட்கொண்டது. அந்த தேவ அமைதியுடன் அவர் எல்லா நிந்தைகளையும், அவமானங்களையும், இழிவுகளையும் பொறுமையாய் சகிக்க அவர் பெற்ற சமாதானம் உதவியது.

**துன்பங்களிலும் தேவன் தம்மோடிருப்பதை உணர்ந்தார்:** நாம் பாடுகளின் பாதைகளில் நடப்பதைவிட, அங்கே தனிமையாக நடக்கிறோம் என்ற உணர்வுதான் நம்மை மிகுதியாக விசனப்படுத்தும். ஆனால் ஜெபம் அந்த தனிமையுணர்வை மாற்றுகிறது. எனவே அவர் ஜெபத்தின் மூலம் பிதாவாகிய தேவன் தம்மோடிருப்பதை வானத்திலிருந்து வந்த தூதன் தன்னை பலப்படுத்தியதன் மூலம் உணர்ந்தார்.

எனவே துயர துன்ப வேளைகளில் எனக்கு ஏன் இந்த கஷ்டம் என மனந்தளராமல், முறுமுறுக்காமல் அக்கினி சூளையாயினும் என் சிருஷ்டிகர் என்னோடிருக்கிறார் என்பதை ஜெபத்தின் மூலம் நாமும் பெற்று சோதனைகளைக் கடக்கவும், மேற்கொள்ளவும் செய்வோம்.

இந்த தியானத்தின் பெறும் பகுதி திரு. சாம்சன்பால் அவர்களது ஜீவநீரோடை தினசரி தியான நூல் 2007-லிருந்து எடுத்து கையாளப்பட்டிருக்கிறது என்பதை நன்றியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஜெபம் பற்றிய பேருண்மைகள் தொடரும்...**

# ஆழத்தில் வலை வீசுவோம் - 29

## எபேசியர் 5–ம் அதிகாரம்

4–ம் அதிகாரத்தில் துவங்கிய புதிய கிறிஸ்தவ பரிசுத்த வாழ்விற்கான விதிமுறைகள் 5–ம் மற்றும் 6–ம் அதிகாரங்களிலும் தொடர்கின்றன.

**5: 1–7 அன்பிலே நடந்து கொள்ளுங்கள் – ஒழுக்கக் கேடு வேண்டாம்.**

குழந்தைகள் பெற்றோரை பின்பற்றி நடப்பதை போல, நாமும் கிறிஸ்துவினுடைய மாதிரியை பின்பற்றி நடக்க வேண்டும். கிறிஸ்து நாம் வாழும்படி, தம்மைத் தாமே சுகந்த வாசனையான தகனபலியாக ஒப்புக் கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தார். அதே போல நாமும் பிறருக்காக அன்பும், நம்மை அர்ப்பணிக்கும் சேவை மனப்பாங்கும் கொண்டிருக்க வேண்டும். மேலும் விசுவாசிகள் வாழ்வில் பரியாசம், பகடி செய்தல், பரத்தன்மை போன்ற தேவையற்ற, முறையற்ற காரிங்கள் காணப்படவும் கூடாது.

அவிசுவாசிகளுடனான தொடர்பை முற்றிலும் விட்டுவிட வேண்டும் என பவுல் கூறவில்லை. அவர்களை இயேசுவிடம் நடத்த வேண்டுமெனில் நாம் அவிசுவாசிகளுடன் நட்புடன் இருக்க வேண்டும். அதே சமயம் சரியான வாழ்க்கைமுறை இல்லாதவர்கள் வெளியிலிருந்தாலும், சபைக்குள் இருந்தாலும் அவர்களை விட்டு விலகி இருப்பதே நலம்.

**5 : 8–14 ஒளியிலே நடந்துக் கொள்ளுங்கள் – இருள் வேண்டாம்.**

விசுவாசிகள், அவிசுவாசிகள் இவர்கள் நடக்கைகளை வித்தியாசப்படுத்த பவுல் ஒளியின் பிள்ளைகள், இருளின் பிள்ளைகள் என கூறுகிறார்.

ஒளிக்கும் இருளுக்கும் உள்ள வேறுபாட்டை கூறுகையில், ஒளியாய் இருக்கிற தேவனை சார்ந்தவர்கள், தங்கள் வாழ்க்கையில் அவருடைய ஒளியை பெற்றிருப்பது மாத்திரமல்ல, அந்த ஒளியை, இருளுள்ள மனிதரின் வாழ்க்கையில் அறிமுகப்படுத்துகிறவர்களாய் இருக்கிறார்கள் என பவுல் கூறுகிறார்.

ஒளியின் பிள்ளைகளுடைய வாழ்க்கை எல்லா விமர்சனங்களுக்கும் அப்பாற்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

பாவத்தில் முடிகிற எந்த செயல்பாட்டையும், ஆசை இச்சையையும், தவிர்த்து அப்படிபட்டவைகளுக்கு உடன்படாமல் இருத்தல் நல்லது. இருளின் வாழ்க்கை முறைக்கு எந்தவிதத்திலும் பங்குள்ளவர்களாய் இருத்தல் கூடாது.

எனவே அபாயகரமான சூழலுக்குள் நம்முடைய வாழ்க்கை வீழ்ந்துவிடாதபடி, மரித்த, தூங்குகிற நிலைமையிலிருந்து “விழித்து எழு” என பவுல் எழுதுகிறார்.

**5:15–20 ஞானமாய் நடந்துக் கொள்ளுங்கள் – புத்தியீனம் வேண்டாம்**

இருளுக்கும் ஒளிக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கிய பவுல் ஞானமுள்ள வாழ்க்கை முறை ஞானமற்ற வாழ்க்கை முறை பற்றி கூறுகிறார்.

ஞானமற்றவன் காலத்தை பிரயோஜனப்படுத்த அறியான்.

தன்னை குறித்த தேவ நோக்கத்தையும், சித்தத்தையும் அறியான்.


ஞானமுள்ள வாழ்க்கை முறைக்கு அடித்தளம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல்.

மதுபானத்தினால் நிரம்பியிருத்தல் ஞானமற்ற, துன்மார்க்கமான வாழ்க்கை முறை.

ஆவியினால் நிரப்பப்பட்டவன், பாடல்களால் தேவனுக்கு நன்றி சொல்வான், ஆராதிப்பான், பிறருக்கு சாட்சியாய் வாழ்வான்.

– தொடரும்

# I. READ AND RECOGNISE : 19




Read and Recognise, வேதாகமப் புதிர், வேதவினா குறுக்கெழுத்துப் போட்டிகளில் அனைவரும் பங்கு பெறலாம். **25.09.2018**க்குள் விடை அனுப்பப்பட வேண்டும். குலுக்கல் முறையில் பரிசுகள் உண்டு.


பதில் அனுப்பப்பட வேண்டிய முகவரி :
திருமதி. **ஷர்லி காலின்ஸ்**
120/4, சீயோன் ஆலய வளாகம்,
திருச்சி – 620 008.

**97914 09192 என்ற அலைபேசி எண்ணுக்கு கருப்பு மையில் பதிலையும் பெயரையும் தெளிவாக எழுதி Whatsapp மூலம் பதிலை அனுப்பலாம்.**


## Guidelines :

a. Bible Portion : Mark 1 & 2 Chapters

b. All answers begin with the letter "P"

c. Letters can be used any number of times. d. Give the reference.

**Questions :**

1. No one sews on ................ of unshrunk cloth on an old garment.
2. ...................... alongside of the sea of Galilee, Jesus saw Simon and Andrew.
3. "I say to you, rise, ..................... up your bed and go home."
4. .......................... the way of the Lord make his ................. straight.
5. They came, bringing to Jesus a .................... carried by four men.
6. ................ came and said to him, "Why do John's disciples and the disciples of the ..................... fast, but your disciples do not fast?
7. Let us go on to the next towns, that I may ............... there also.
8. You are my beloved son, with you I am well ..........................
9. Go, show yourself to the ................. and offer for your cleansing what Moses commanded.
10. As they made their way, Jesus' disciples began to ............. the heads of grains.

## Answers : I. Read and Recognise : 18 (Matthew 27 & 28)

**1.Simon - 27:32**
**2. snow - 28:3**
**3. sabacthani - 27:46**
**4. see, Sabbath - 28:1**
**5. seat, sent -27:19**
**6. seek - 28:5**
**7. spit , struck- 27:30**
**8. stripped, scarlet - 27:28**
**9. sufficient, sum, soldiers - 28:12**
**10. stone, sat 28:2**

பரிசு பெறுபவர்கள் :

1. செல்வி. **ஷேரன் ஜெனிபர்**, திருச்சி
2. திருமதி. **நலந்தா டேவிட்**, இலால்குடி
3. திருமதி. **ஜாய்ஸ் சுசீலாதேவி** புதுச்சேரி,
4. திருமதி. **கிறிஸ்டபல் நிர்மலா** தஞ்சை

# II. வேதாகமப் புதிர் - 19

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ல் | ப | ற் | று | ம் | ய | சி | க | ர | இ |
| த | நீ | ம் | வு | ர | கா | ட் | உ | ன் | ர |
| மு | த் | தி | ரை | உ | ட | ன் | யி | மை | த் |
| ற் | அ | மு | ல | மு | ன | த | ர் | கி | த |
| கா | மு | உ | ன் | த | ய | ந் | ப் | ம | த் |
| ல | ம் | ர | ங் | வி | ய | ந | பி | க | தி |
| த் | மு | க | னா | ம் | ள | அ | த் | ஆ | னா |
| தி | ளி | லே | னா | யி | வி | ஆ | தா | பி | லே |
| லே | வி | சு | பே | எ | ம் | ழ | ர் | ம் | அ |

## எபேசியர் 1 – 3 அதிகாரங்கள்

1.இவ்வேத பகுதியில் உள்ள 15 வார்த்தைகள் குறுக்கும் நெடுக்குமாக, வல இடமாக, மேலும் கீழுமாக இடம் பெற்றிருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்து வசன இருப்பிடம் எழுதி வரிசைப்படுத்தவும்.

2. சிதறியுள்ள 22 எழுத்துக்களை ஒழுங்குப்படுத்தினால் அப்.பவுல் கிறிஸ்துவினுடைய எவற்றை இன்னதென்று உணர்ந்து கொள்ள வலியுறுத்துகிறார் என்பது வெளிப்படும்.

## II. வேதாகமப் புதிர் - 18 விடை

**மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். கலா. 6:7**

8–ம் பக்க தொடர்ச்சி

←←←

8. மீட்கப்படும் நாளுக்கென்று நாம் தேவ ஆவியை இப்படி பெற்றிருக்கிறோம். (4)
10. முன்னே தேவனுக்கு தூரமாயிருந்த நாம் இயேசு கிறிஸ்துவின் எதனால் சமீபமாயிருக்கிறோம். (5)
11. அலகைக்கு பல பெயர்கள் உண்டு. பவுலடியார் இந்நிருபத்தில் கொடுத்துள்ள பெயர். (6)

↑↑↑

13. இதுவே உலகத்தை ஜெயிக்கும் ஜெயம். கிருபையினாலே இதனைக் கொண்டு இரட்சிக்கப்பட்டுள்ளோம். (5)
14. அனைவருக்கும் சமமாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள இதனை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அது என்ன? (3)

## THOUGHT TO PONDER

**If a piece of paper has gospel printed on it, it has the power of God behind it.**

# வேதாகமத்தைப் புரிந்து கொள்வது எப்படி? - LIV

**உலக சரித்திரத்தில் யூதர்களின் நிலை : விழாக்கள் : பஸ்கா** தொடர்கிறது.

**வேதத்தில் பஸ்கா அனுசரிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் :**

1. முதலாவது பஸ்கா பண்டிகை எகிப்தில கொண்டாடப்பட்டது. யாத். 12:1-11, 21-20
2. இரண்டாவதாக ஒரு வருடத்திற்குப் பின் இஸ்ரவேலர்கள் தங்கள் பயணத்தின்போது சீனாய் வனாந்தரத்தில் அனுசரித்தனர். எண். 9: 1-5
3. முப்பத்தெட்டு வருடங்களுக்குப் பின் எரிகோவின் சமனான வெளிகளிலே ஆசரித்தார்கள். யோசுவா 5: 9, 10.
4. வெகுகாலத்திறகு பின் எசேக்கியா ராஜாவின் நாட்களில் 2-ம் மாதம் நடந்த பஸ்கா 2 நாளா. 30: 13-20
5. யோசியா ராஜாவின் ராஜ்ஜிய பாரத்தின் பதினெட்டாம் வருடம் வெகுவிமிரிசையாகக் கொண்டாடப்பட்ட பஸ்கா. 2 இரா. 23:21-23; 2 நாளா. 351-19

சிறையிருப்பிலிருந்து திரும்பிய யூதர்கள் ஆண்டுதோறும் பஸ்காவை அனுஷ்டித்தனர். எனினும் ஒரு சில பஸ்கா கொண்டாட்டங்கள் மட்டுமே வேதத்தில் பதிவாகியுள்ளன. அவையாவன :

6. பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திரும்பிய யூதர்கள் இரண்டாம் ஆலயத்தைக் கட்டி முடித்தபின் செருபாவேலின் கீழ் ஆசரித்த பஸ்கா. எஸ்றா. 6-19.
7. இயேசு 12 வயது சிறுவனாக இருந்தபோது பெற்றோர்களோடு கலந்து கொண்ட பஸ்கா லூக். 2: 41, 42
8. இயேசு கிறிஸ்துவின் ஊழிய ஆரம்பத்தில் அவர் கலந்து கொண்ட பஸ்கா. யோவான். 2:13-17
9. இயேசுவின் ஊழியத்தின் மத்தியில் நடந்த பஸ்கா. யோவான் 6:4
10. இயேசுவின் இவ்வுலக ஊழிய இறுதியில் அவர் முன்னின்று பங்கு பெற்ற பஸ்கா. மத். 26:17-21

இன்று கிறிஸ்தவர்கள் இப்பண்டிகையை அனுசரிப்பதில்லை. எனினும் கிறிஸ்து கொண்டாடிய இறுதி பஸ்காவைத் தொடர்ந்து (1 கொரி 11:24 - 26) அவர் தமது சீஷர்களிடம் அப்பத்தைப் பிட்டு சீஷர்களுக்கு கொடுத்து நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என் சரீரம்; என்றும் ரசத்தை பகிர்ந்து பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காக சிந்தப்படுகிற புதிய உடன்படிக்கைக்குரிய என் இரத்தமாயிருக்கிறது என்றும், தன்னை நினைவுகூறும்படி சொன்னதை ஒரு முக்கிய சாக்கிரமெந்தாக நாம் கடைபிடித்து வருகிறோம்.

II. புளிப்பில்லா அப்பப் பண்டிகை : பஸ்கா பண்டிகையைத் தொடர்ந்து இது கொண்டாடப்படுகிறது. புளிப்பில்லா அப்பம் ஏழு நாளளவும் புசிக்கப்பட்டது. ஏழாம் நாளிலே கர்த்தருக்குப் பண்டிகை ஆசரிக்கப்படுகிறது. யாத். 13:6-10

- தொடரும்

**ஆரோனின் துளிர்த்த கோல் இதழை கடந்த ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து வெளியிட உதவிய தேவனது பெரிதான கிருபைகளுக்கு நன்றிகளை ஏறெடுக்கிறோம்.**

## கடந்த மாத வேதவினா போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் செல்வி / செல்வன்/ திருமதி / திருவாளர்.

**I.** 1. ஷரன் ரூத், 2. T. ஜெயராஜ், 3. சாராலின்சி கோல்டு, 4. ஹெப்சி பானுமதி, 5. ஜெஃப்ரி, 6. கிறிசாலின், 6. எல்வின் கிறிஸ்பால், 7. இசபெல் பிங்கி, 8. மைகேல் ஜோவன், 9. ஜெஸ்லின் ஆன்டிரியா, 10. இஸ்ரேல் அபிஷாகி

**II.** 1 . ஜெயந்தி ஜெயராஜ், 2. ஜெபசீலி ஜெயக்கொடி, 3. P.D. கமலம்

**I & II.** 1. பெனிட்டா ஆரோன், 2. ஜெனிட்டா சுரேஷ், 3. மோனிகாள் காந்திநாத், 4. பியூலா துரைராஜ், 5. சாந்தி அசோக்

**I & III.** 1. ஜெயசீலி ஜெயராஜ் (திருநெல்வேலி), 2. ரூத் வயலட்,


**II & III.** 1. சாந்தி பிலிப்பு, 2. சோபியா ஜெரோம், 3. மல்லிகா எட்வின், 4. சலோமி எட்வின், 5. மாலின் சுரேஷ், 6. J. ஏஞ்சலினா, 7. காந்தா மனோகரன், 8. சாந்தி குணா, 9. சுகந்தி ஜோன்ஸ், 10. T. சுகந்தா, 11. தேவதாஸ் செல்வக்குமார், 12. லிடியா ஜெயசீலன், 13. ஏஞ்சலின் சிந்தியா, 14. சாருஹாசினி, 15. GT. ஜூலி, 16. ஜாய்ஸ் மணிமொழி, 17. பிரேமி மெடில்டா, 18. ஜாய்ஸ் சுசீலாதேவி, 19. S. செல்வமணி, 10. ஸ்டெல்லா மார்டீன், 11. பியூலா ஜெயபிரகாஷ், 12. அன்னமேரிராஜ், 13. சின்னம்மாள் மேரி, 14. சுகுணா எலிசபெத், 15. A.V.வர்ஜீனியா, 16. சுதந்திரதேவி, 17. ஜீவாமிர்தம், 18. ஜெயசீலி ரவிசந்திரன், 19. I. டெய்சி, 20. பியூலா நவமணி, 21. ஹேமலதா ஜெயசந்தர், 22. JT. அற்புதம், 23. பிரியதர்ஷினி, 24. கவின் ஹென்றி, 25. பியூலா அன்புமலர், 26. எமல்டா காட்வின், 27. அற்புதமணி, 28. ஆரோக்கிய நிஷா, 29. திரிஷா

**III.** 1. சகுந்தலா தனராஜ், 2. P. லிடியா, 3. சந்தரிகா, 4. கிறஸ்டி, 5. அனுசூயா, 6. ஸ்டெல்லா, 7. அஹ்சால், 8. ஜெனிபர் ஜான்சன், 9. குணத்திலகா யோனத்தான், 10. ரத்னம் விமலாபாய், 11. ஜெயசீலி செல்லையா, 12. ஜெஸி வின்செண்ட், 13. ஷெரன் ஜெனிபர், 14. மாலா கிஸ்டி, 15. ஷீலா ஜான்சன், 16. கமலா ஜார்ஜ், 17. சோபியா பெஞ்சமின், 18. மியூரியல் ராபர்ட், 19. எஸ்தர் ஜெபராஜ், 20. M. பத்மாவதி, 21. நான்சி ஜோசப், 22. M. எலிசபெத் ராணி, 23. G. எலிசபெத், 24.S. ஜான்சி ராணி, 25. எலிசபெத் ஜோனாஸ், 26. சுபா வணக்கராஜ், 27. நகோமி நெல்சன், 28. தெரசா, 29. அன்னாள், 30. நேசமணி, 31. Sis.நகோமி, 32. Dr. ஜெசிந்தா பிரபாகரன், 33. லிடியா காந்தன், 34. Sis. ஜூலியட், 35. Sis. சலோமி, 36. குளோரி, 37. திலகவதி சுந்தரராஜ், 38. சித்ரா பாபு, 39. லூசி ஞான பரணம், 40. M. விக்டோரியா

**I, II, III:** 1. ஜாய் ஜோசப், 2. கெத்சி ஆர்த்தர், 3. கிறிஸ்டபெல் நிர்மலா, 4. மார்கிரேட் எலிசபெத் , 5. S. தனபாக்கியம், 6. ரூபல்லா அற்புதராஜ், 7. புவனேஷ்வரி, 8. ஜெயசீலி ஜெயராஜ் (லால்குடி), 9. எஸ்தர் ராபின்சன், 10. அன்புக்கமலம், 11. சாந்தி வில்லியம், 12. ஜூலியா சார்லி, 13. ஒலிவியா லாங்டன், 14. நலந்தா டேவிட், 15. ரோசலின் திலகவதி, 16. விமலா ஆனந்ததாஸ், 17. ரபேக்கா ஐசக், 18. விமலா குழந்தைசாமி, 19. மீரா பாண்டியன், 20. ருவல்யா அருள்பிரகாசம், 21. ஜூலா கிரேஸ், 22. மனோகரி பெஞ்சமின், 23. பியூலா ஜேசுராஜன், 24. ஜாஸ்மின் உஷாராணி, 25. ஐவி கலாவதி, 26. பாக்கியராணி, 27. கீத்தா கிறிஸ்டோபர், 28. ஜோசப் அதிசயம், 29. திலகவதி அதிசயம், 30.ரூத் சரோஜினி, 31. மெர்ஸி இன்பராஜ், 32. ரீட்டா ரோசலிண்ட், 33. செலைன் ராணி டேவிட், 34. கலாவதி தயாளகரன், 35. ஆலிஸ் ஜோசியா, 35. ஜெபவதி ராயப்பன், 36. பாலின் மார்டீன், 37. தேவகிருபா, 38. நகோமி எடிசன், 39. சந்திரா இம்மானுவேல், 40. எலிசபெத், 41. J. மிராண்டா, 42. நகோமி டேவிட், 43. கிறிஸ்டினா பெஞ்சமின், 44. சாந்தி ஜோயல், 45. இவாஞ்சலின், 46. ஜேனட் குணா, 47. ஹெலன் சேசுராஜ், 48. ஷீலா பாலகுமார், 49. சூசன் சுமித்ரா, 50. இமல்டா சுந்தர்சிங், 51. ராணி சாந்தகுமார், 52. ஜாகுலின் உஷா, 53. ஷாலினி இம்மானுவேல், 54. ஜெயசீலி பால்ராஜ், 55. வித்யா வில்சன், 56. மனோன்மணி ரெய்னால்டு, 57.கிரேஸ் பிராங்கிளின், 58. ரெஜினா மேரி மனோகரன், 59. பிரேமா ஜாய்ஸ் ஹெப்சி, 60. ஹெப்சி கிங்ஸ்லி, 61. குயினி மார்ஷல், 62. J. மெர்ஸி, 63. எஸ்தர் ராஜேந்திரன், 64. ஏஞ்சல் டானியேல், 65. M.S. ஜேம்ஸ், 66. K. சண்முகம்

# III. வேதவினா குறுக்கெழுத்துப் போட்டி - 73

## எபேசியர் - விடுகதைகள்



Book - Post

பெறுநர் : திரு/திருமதி

↓↓↓

1. குடும்ப வாழ்க்கையின் மூலம் பவுல் வெளிப்படுத்தும் பெரிய இரகசியத்தில் யாரைப் பற்றி சொல்கிறார்? (6)
2. பிதா தம்முடைய தயவுள்ள எதினால் நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய் முன் குறித்திருக்கிறார்? (4)
3. பிதாவாகிய தேவனிடத்தில் இது இல்லை. (6) ↑11. இதையறிந்து நாம் விட்டுவிட வேண்டியது எது? (5)
8. வாக்குதத்ததுடன் கூடிய கற்பனை வகிக்குமிடம். (3)
9. முதலில் விரும்பத்தக்க என்ற பொருள் பெறுவேன். இரு ஆண்டுகளுக்கு மேல் இங்கு தங்கி சபையை ஸ்தாபித்தேன். சபை எது? (3) → 3. நான் யார்? (3)

→→→

1. புதிய ஏற்பாட்டு நிருபங்களில் நமக்காக வைக்கப்பட்டுள்ள ஏழுவித ஐஸ்வரியங்களில் மூன்று எபேசியரில் உள்ளது. அவை என்ன? (11) கடைசி இரு எழுத்துக்கள் ↓
4. புத்திமதி சொல்வதற்கு பல வழிகளுண்டு. ஒருவருக்கொருவர் இவற்றால் புத்தி சொல்லுங்கள் என்று பவுல் கூறும் ஆலோசனையில் கடைசியில் இடம்பிடிப்பது எது? (6) கடைசி மூன்று எழுத்து ↓6. முதலிடம் பிடிப்பது எது? (5).
5. கர்த்தருக்குள் உண்மையுள்ள ஊழியக்காரன் நான். எபேசியரின் இருதயங்களை ஆறுதல் செய்ய பவுலால் அனுப்பப்பட்டேன். (4)
7. விசுவாச வீரன் தன்னை ஆயத்தப்படுத்த தொடுக்க வேண்டியது என்ன? (5)
12. பழைய ஏற்பாட்டு பக்தர்களுக்கு கிடைக்காதது இது. நமக்கு இயேசு கிறிஸ்து மூலமாய் பிதா முன் குறித்திருக்கிறார். அது என்ன? (9)

-தொடர்ச்சி 5- ம் பக்கம்